**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 1 /2020 PW4 .**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | தந்தை/கணவர் பெயர்: அழகு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

---

**(3ம் எதிரி ஆஜர் 1,2 மற்றும் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1,2 மற்றும் 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>12.11.2025 முதல் விசாரணை</u>:**

1. நான் நெற்குப்பை பூசணிகளத்தல் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். 28.01.2019ம் தேதி மாலை சுமார் 4–5 மணியளவில் நெற்குப்பை காவல் நிலைய ஆய்வாளர் சம்பவ இடமான பூசணிகளத்திற்கு வந்து அ.சா.1யின் வீட்டு அருகே வரைபடம் தயாா செய்து, விசாரணை செய்தார். அப்போது நானும் பாண்டிமுருகனும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ –2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

2. அ.சா.1 எனது அப்பா ஆவார். நான் சம்பவ இடத்தில் வைத்து மேற்படி கையொப்பம் செய்தேன். போலீசார் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதிருந்தது என்று என்றால் சொல்ல முடியும். இந்த ஆவணத்தில் கையொப்பம் செய்த பாண்டி முருகன் எனது சகோதரர் ஆவரர். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு என் அப்பா கொடுத்த புகாருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.